தமிழ்நாடு அரசு

கடித நிலைஎண்.64,

நாள் 3.3.2000

அனுப்புநர்
திரு இ.வீ.மணிவண்ணன்,இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,
சென்னை / 25.

ஐயா,

பொருள் தொழில் நுட்பக் கல்வி பல்தொழில் நுட்பப் பட்டயக் கல்வி மாணவர் சேர்க்கை 2000 2001 ஒற்றைச் சாளர முறை தொடர ஆணை வெளியிடப்படுகிறது

பார்வை 3.6.98 நாளிட்ட உயர்கல்வித் துறை அரசாணை எண்.221

27.12.2000 தேதியிட்ட தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கடித எண். 26902.ஐ2.99

''''''''''

அரசாணை எண்.221, உயர்கல்வி, நாள் 3.6.98ல் 1998 99 ஆம் ஆண்டிற்கான பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் மாணவர்கள் சேர்க்கையில் ஒற்றைச்சாளர முறையினை பின்பற்றலாம் என அரசு ஆணையிட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் கண்டுள்ள கடிதத்தில், 2000 2001 ஆம் கல்வி ஆண்டில் பல்தொழில் நுட்பப் பட்டயப் படிப்பு மாணவர் சேர்க்கையில் ஒற்றைச் சாளரமுறையை தொடர்ந்து பின்பற்றலாமா என ஆணை வேண்டி தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார். அக்கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து 2000 2001 ஆம் கல்வி ஆண்டில் பல்தொழில் நுட்பப் பயிலக பட்டயப் படிப்பு மாணவர் சேர்க்கையில் நுழைவுத் தேர்வு மூலம், கீழே குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி ஒற்றைச் சாளர முறையை தொடர்ந்து பின்பற்றலாம் என அரசு ஆணையிடுகிறது.

**வழிமுறைகள் (Guidelines)**

1. எஸ்.எஸ்.எல்.சி , சி.பி.எஸ்.சி., மெட்ரிக்குலேசன ஆங்கிலோ இந்தியன் ஐ.எஸ்.சி போன்ற அனைத்து பாடமுறைகளைச் சார்ந்த மாணவர்களும் தகுதியுடையவர் ஆவர்.
2. கணிதம், அறிவியல் மற்றும் சமூகவியல் ஆகியவை நுழைவுத் தேர்வுக்குரிய பாடங்களாகும்
3. வினாத்தாள், 100 வினாக்களை கொண்டதாகவும் Objective Type அடிப்படையிலும் அமைந்திருக்கும்
4. நுழைவுத் தேர்வுக்கு 100 மதிப்பெண்கள்
5. தகுதித் தேர்வுக்கு (qualifying exams) 500 மதிப்பெண்கள்
6. தகுதித் தேர்வு (500) மற்றும் நுழைவுத் தேர்வுகளில் (100) பெறும் மொத்த மதிப்பெணகளின் (600) அடிப்படையில் மாணவர் வரிசைப் பட்டியல் (Rank list) தயாரிக்கப்படும்
7. நுழைவு தேர்வு மற்றும் நேர்காணலுக்கான (Counselling)ககல அட்டவணை பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| அ | நுழைவுத் தேர்வு விண்ணப்பப் படிவங்களுக்கான அறிவிக்கை | 2.4.2000 மற்றும் 9.4.2000 |
| ஆ | விண்ணப்பப்படிவங்கள் வழங்குதல் | 3.4.2000 |
| இ | விண்ணப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் | 26.4.2000 |
| ஈ | நுழைவுத் தேர்வு நாள் | 14.5.2000 |
| உ | நுழைவுத் தேர்வு முடிவுகள் வெளியிடுதல் | 1.6.2000 |
| ஊ | மாணவர் சேர்க்கை விண்ணப்பப் படிவங்களுக்கான அறிவிக்கை | 4.6.2000 மற்றும் 11.6.2000 |
| எ | விண்ணப்பப் படிவம் வழங்குதல் | 5.6.2000 |
| ஏ | விண்ணப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் | 3.7.2000 |
| ஐ | வரிசைப் பட்டியல் (Rank list)வெளியிடுதல் | 8.7.2000 |
| ஒ | நேர்காணல் (counselling)தொடக்கம் | 17.7.2000 |
| ஓ | நேர்காணல் முடியும் நாள் | 18.8.2000 |
| ஔ | மாணவர் சேர்க்கைக்கான இறுதி நாள் | 30.8.200 |

8. நுழைவுத் தேர்வுக்கான விண்ணப்பபடிவத்தின் விலை (தேர்வு கட்டணம் உள்பட)

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ.100./

2. மற்றவர்களுக்கு ரூ.150./

9. மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவத்தின் விலை

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ.30

2. மற்றவர்களுக்கு ரூ.100.

நுழைவுத் தேர்வு நடத்துவது மற்றும் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளை வகுப்பது தொடர்பாக குழு அமைத்திட தக்க கருத்துருவை உடனடியாக அரசுக்கு அனுப்பும்படி தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

3. மேலும், ஒற்றைச் சாளர முறையில் மாணவர் சேர்க்கை முடிவுற்ற பின்னர், இது குறித்து ஒரு விரிவான அறிக்கை அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு செயலாளருக்காக

நகல்

கூடுதல் தொழில் நுட்பக் கல்வி இயக்குநா, சென்னை/25

முதல்வர் அமைச்சர் . கல்வி அமைச்சர் அலுவலகம், சென்னை/9

உயர்கல்வி செயலாளரின் நேர்முக உதவியாளர்